**தலைப்பு 309 – கட்டிட திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கட்டிட திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கட்டிட திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கட்டிட திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிட திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கட்டிட திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) நிதி நிலைமைக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கணக்கின் படி வாகனங்களின் பெறுமானம் ரூபா 148,470,000 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், வாகன பத்திரங்களின் படி 07 வாகனங்கள் சம்பந்தமாக பெறுமானம் ரூபா 2,845,000 கூடுதலாகவும் ஒரு வாகனத்தின் பெறுமானம் ரூபா 300,000 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | அசையாத சொத்துக் கூற்று மற்றும் வாகன பத்திரத்தின் பெறுமானங்கள் சமமாக இருத்தல் வேண்டும். | 2018.12.31 திகதிக்கு நிதிக் கூற்றுக்களில் அரச கணக்கீட்டு திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய அவ்வருடம் 2018.04.14 காப்புறுதி நிறுவனத்தினால் பெற்றுக் கொடுத்துள்ள மதிப்பீட்டு பெறுமானங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் அதை அசையா சொத்துக்களுக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ii) | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் கைப்பற்றுதல், நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,559,475 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களை கைப்பற்றுதல் சரியான முறையில் கணக்கில் உள்ளடக்கப்பட வேண்டும். | உப காரியாலயத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2018.12.31 திகதிக்கு அசையா சொத்துக்கான அறிக்கையில் உள்ளடக்கப்படாமை இவ்வேறுபாட்டுக்கு காரணமாகும். |
| (iii) | சொத்துக்களுக்கான | சொத்துக்களுக்கான | நிதி நிலைமைக் கூற்றில் |

| | | |
|---|---|---|
| செலவு மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதிக்கூற்றின் படி ரூபா 694,092,706 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் நிதிசாரா சொத்துக் கூற்றின் படி ரூபா 748,119,858 ஆக இருந்ததால் நிதி நிலைமைக் கூற்றில் நிதிசாரா சொத்து ரூபா 54,027,152 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | செலவு மற்றும் உப காரணங்களின் பெறுமானம் சரியான முறையில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைவாக காட்டப்பட்டதன் பிழையை திருத்தப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

**1.6.2 வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு வருமானத்திற்கான தலைப்பொன்று இல்லாததுடன் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 298,614,039 வருமான பெறுவனவுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | சரியான வருமானத் தலைப்புக்களின் கீழ் கணக்குகள் உள்ளடக்கப்பட வேண்டும். | நிறுவனத்தின் வசதியை முன்னிட்டு 2018 ஆம் வருடம் வேறு நிறுவனங்களுக்காக சேர்க்கப்பட்ட வருமானம் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தன. |

**1.6.3 முற்பணக் கணக்கு மிகுதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓய்வு பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 297,461 கடன் மிகுதி சுமார் 02 வருட காலமாக அறவிடப்படாது இருந்தது. | உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுவதற்கு முன் பெற்றுக் கொண்டுள்ள கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஒருவரினது கடன் மிகுதி ஒன்று திரட்டிய ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளதுடன் மற்றவரது கடன் மிகுதியையும் ஒன்று திரட்டிய ஓய்வூதியப் பணத்திலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டதாகவும் பேணப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு<br>1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கைக்கு அமைவாக காணிகளுக்கான நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | திறைவேரி சுற்றறிக்கைக்கு அமைய காணிகளுக்கான நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும். | நடைமுறை தகவல்களின் படி காணிகள் சம்பந்தப்பட்ட பதிவறிக்கைகள் பராமரிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) பொறுப்புக்களுக்கான பதிவேடு<br>நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களுக்கான பத்திரம் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 பிரகாரம் பொறுப்புக்கள் நாள்தோறும் பரீட்சிக்கப்படக் கூடியதாக பொறுப்புக்க ளுக்கான பதிவேட்டில் பதியப்பட வேண்டும். | அறிக்கையாக நாளதுவரையாக்கப் பட்டுள்ளது. |

### 1.6.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழுள்ள விடயங்கள் சம்பந்தமாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டி இருந்தபோதிலும் அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்கான ஆக்கபூர்வமான உள்ளக நிர்வாக முறைமையொன்றை தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக் கமைவாக | இத்திணைக்களத்தில் நிதிநிர்வாகத்திற்காக ஆக்கபூர்வ உள்ளக நிர்வாக முறைமை தற்போது நடைமுறையில் உள்ளதுடன் சம்பந்தப்பட்ட உள்ளக விதிமுறை முன்னால் |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியுள்ளதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மையினை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் அதிபதியிடம் முன்வைக்கப்பட வேண்டியிருந்தும் அப்படியானதொரு மீளாய்வு செய்யப்பட்டதுக்கான கூற்று கணக்காய்வில் முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. | செயல்பட வேண்டும். | அறிக்கையாக முன்வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். |

## 1.6.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிகளுக்கான கணக்காய்வு ஆராய்வுகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டதிட்ட மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) அத்தியாயம் 1 | சேவையில் ஈடுபட்டிருக்கும் முழு ஊழியர்களுக்குமான வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடுதல் 2018 ஆம் ஆண்டு முதல் செய்ய வேண்டி இருப்பினும் அப்படியான செயலாற்று உடன்படிக்கை கைச்சாத்திடுதல் செய்யப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் செயல்படுத்தல் வேண்டும். | சேவையில் ஈடுபட்டிருக்கும் முழு ஊழியர் குழாமுக்கான வருடாந்த செயலாற்று உடன்படிக்கை கைச்சாத்திடுதல் இத் திணைக்களத்தினால் செய்யப்படாததுடன் எதிர்வருடம் அதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| (ii) அத்தியாய | திணைக்களம் 2016 - 2020 கால கட்டத்திற்கான பயிற்சி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக் | 2018 வருடத்திற்கான மொத்த ஒதுக்கீடும் |

| | | | | |
|---|---|---|---|---|
| ம் 6.1 | | திட்டமொன்று தயார் செய்யப்பட்டிருந்த போதும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி ஊழியர் குழாமின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்குமான ஆகக்குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி பெறும் சந்தர்ப்பமொன்றை பெற்றுக் கொடுக்கும் படியான பயிற்சி வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கமைய மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | திணைக்களத்தில் தற்போது சேவையாற்றும் உத்தியோகத்தர் எண்ணிக்கைக்கு பயிற்சியளிப்பதற்கு போதுமானது இல்லை. அத்தியாவசியத் திற்கேற்ப பயிற்சியை பெற்றுக் கொடுப்பதுடன் முன்னே சகல உத்தியோகத்தர் களுக்கும் பயிற்சி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| பெறுகை வழிகாட்டல் கோவை 2006 பொருட்கள் மற்றும் வேலைகள் --------------------------------- - | | | | |
| பந்திகள் 8.9.1 மற்றும் 8.9.3 | 717,000 | கொள்கலனை கொள்வனவு செய்வதில் முறையான ஏற்புக் கடிதமொன்று பெற்றுக் கொடுக்காததுடன் ஒப்பந்த உடன்படிக்கையும் செய்து கொள்ளப்பட வில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு அமைவாக சேயல்படல் வேண்டும். | தற்போது திணைக்களத்தினால் ஒப்பந்த உடன்படிக்கை தயாரிக்கப்படுவது அங்கீகரிக்கப்பட்ட மனுக்கோரலுக்கான பத்திரங்களை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே. ஆகையால் இக் கொள்வனவுக்காக ஏற்புக்கடிதமொன்று (Letter of Acceptance) மாத்திரம் வழங்கப்பட்டது. |

### 1.6.7 நிதிக்கூற்றுச் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை
---------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருந்த மிகுதிகளும் 2018 சனவரி 01 ஆந் திகதி இருந்த மிகுதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் | நடப்பாண்டின் ஆரம்ப மிகுதிகள் முன்னைய ஆண்டின் இறுதி மிகுதிகளுக்கு | ஆரம்ப மற்றும் இறுதி மிகுதி சரியானவை என அரச கணக்கீட்டு திணைக்கத்தினால் அறிக்கை பெற்றுத் தரப்பட்டுள்ளதுடன் அதன் |

| | | |
|---|---|---|
| சொத்துக்களுக்கான உருப்படிகள் 03 சம்பந்தமாக ரூபா 550,985,491 கூடுதலாகவும், உருப்படிகள் 02 சம்பந்தமாக ரூபா 69,603,146 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | சமமாக இருத்தல் வேண்டும். | பெறுமானத்தேய்வை 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாயும் அம்மிகுதிகள் சரியானவை என்றும் இத்தால் அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 14 செலவின விடயங்களுக்கான மதிப்பீடுகளில் கவனிக்கத்தக்க இடைவெளி அவதானிக்கப்பட்டதுடன் இடைவெளி ரூபா 16,000 முதல் 20,004,000 வரையில் அல்லது நூற்றுக்கு 10.67 முதல் நூற்றுக்கு 92.50 வரையாக இருந்தது. | வருடாந்த மதிப்பீடு தயாரிக்கையில் இடைவெளி ஆகக்குறையும் படியாக தயாரிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். | 2018 வருடத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை விட குறைந்தளவிலான பெறுவதை கிடைத்தமையை மற்றும் மேலதிக ஒதுக்கிடு கோரப்பட்டும் ஒதுக்கீடு கிடைக்காமை அத்துடன் மிக அவசியமானதுமான செலவீனங்களை கட்டாயமாக தாக்குப்பிடிக்க நேர்ந்தமை ஆகியன இடைவெளிக்கான காரணிகளாகும். |
| (ஆ) மூலதன ஒதுக்கீட்டின் கீழான மொத்த சேமிப்பு நிகழ்ச்சிகள் 01 மற்றும் 02 குறித்து முறையே ரூபா 4,467,498 மற்றும் ரூபா 11,538,482 ஆனதுடன் அச்சேமிப்பு நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளில் முறையே நூற்றுக்கு 48.5 மற்றும் நூற்றுக்கு 6.6 ஆக இருந்தன. | திட்டமிடப்பட்ட வேலைகள் வருடத்திற்குள் செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தளபாடங்கள் மற்றும் இயந்திரங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் கணனி கொள்வனவுக்கான கோரப்பட்ட போது அதன் விலை அதிகரித்தமையால் விலைமனுக்கள் முன்வைக்கப்படவில்லை. மேலும், கணனி பராமரிப்பு செலவுகள் செய்யப்படவில்லை. வாகனங்களை புதுப்பித்தல் மதிப்பீடுகளை அங்கீகரித்தல் போன்றன தாமதமடைதல், பணம் மீதமாவதற்கான காரணிகளாகும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முன்வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களுக்கான அறிக்கையின் படி ரூபா | பொறுப்பு பத்திரங்களை முறையாக | எதிர்வருடங்களில் சிகாஸ் நிகழ்ச்சியினுள் மற்றும் நிதிக்கூற்றினுள் |

| | | | |
|---|---|---|---|
| | 2,010,677 க்கு ஆன பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் எவ்வித பொறுப்புக்களும் காட்டப்பட்டிருக்கவில்லை | சரிசெய்யப்பட்டு பொறுப்புக்களின் அளவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். | பொறுப்புக்களை அறிக்கைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 10 செலவின விடயங்களுக்கான ஒதுக்கீடுகள் மீறப்பட்டு ரூபா 1,543,275 க்கு ஆன பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. | பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளும்போது வருடத்திற்கான ஒதுக்கீட்டு வரையறை மீறப்படாது இருப்பதற்கு வழிவகுத்துக் கொள்ளல் வேண்டும். | பதில் அனுப்பப்படவில்லை. |

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் பாவனை**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிர்மாணத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் 2018 ஆம் வருடம் ரூபா 2,214,967,537 க்கான ஒதுக்கீடு பெற்றுக்கொடுக்கப் பட்டிருந்ததுடன் அதில் வருடத்தினுள் ரூா 1,575,232,882 க்கான செலுத்தல்கள் செய்யப்பட்டிருந்ததுடன் வருட இறுதியில் ரூபா 639,734,655 க்கான ஒதுக்கீடுகள் மிகுதியாக இருந்தன. அது முழு ஒதுக்கீட்டில் 29% ஆகும். | திணைக்களங்களினால் நிர்மாணத் திட்டங்களை செயல்படுத்தும் போது உரிய காலத்தினுள் திட்டங்களை முடிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏனைய திணைக்களங்களின் செலவின தலைப்புக்கள் சம்பந்தப்பட்ட மிகுதிகளுக்கான அறிக்கையை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டங்களை அமுல்படுத்துவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் Turnkey செயற்திட்டங்களினுள் ரூபா 57.86 மில்லியன் செலவுக்கான மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 12 செயற்திட்டங்கள் எவ்வித செயற்பாட்டு பலனையும் ஈட்டிக்கொள்ளாததுடன் அதற்கு மேலதிகமாக ரூபா 217.67 மில்லியனுக்கான 18 Turnkey செயல் திட்டங்கள் சம்பந்தமான செயல்பாடு நூற்றுக்கு 4 முதல் நூற்றுக்கு 46 வரையாக இருந்தது. | செயல் திட்டங்கள் முறையாக காலகட்டத்தினுள் அமுல்படுத்து வதற்கு மற்றும் செயல்பாடுகளை ஈட்டிக் கொள்வதற்கு செயல்படுதல் வேண்டும். | செயற்திட்டங்களை அங்கீகரிப்பதற்கு தாமதமாதல், ஒதுக்கீடுகளை பெற்றுக் கொடுக்கப்படாதமை மற்றும் செயற்திட்டங்களை இடைநிறுத்தல் போன்ற பலதரப்பட்ட காரணினால் செயல்பாட்டை அடைய முடியாது போயிற்று. |

### 3.2 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு சொந்தமான இரண்டு வாகனங்கள் பாவனை படுத்த முடியாத நிலையில் இருந்தும் அவைகளை நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனைக்கு உதவாத வாகனங்களை ஒதுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு வாகனத்தை பாவனைக்கு எடுக்கவும் ஒன்றை 2019.08.31 தினத்திற்கு பாவனையிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.3 நட்டங்களும் இழப்புக்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் 04 வீதி விபத்துக்கள் சம்பந்தமாக 2017 வருடம் அறவிடப்பட வேண்டியதாக 2017 வருடம் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 388,167 க்கான நட்டத்தினை 2018 ஆம் வருட நிலைமை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டிய போதிலும் அப்படி | வருடத்தினுள் நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் அறவிடப்படுதல் அல்லது தள்ளுபடி செய்தல் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட | ரூபா 388,167 பணத்தை காப்புறுதி நிறுவனங்களிலிருந்தும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட்டுள்ளன. |

| | |
|---|---|
| செய்யப்படாது இருந்ததுடன் அதில் ரூபா 112,992 க்கான நட்டம் அறவிடப்படாது இருந்தது. | வேண்டும். |

**4. நிரந்தர அபிவிருத்தி இலக்கை அடைந்துகொள்ளுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் NP/SP/SDG/17 ஆம் இலக்க மற்றும் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிரந்தர அபிவிருத்திக்கான குறிக்கோளின் இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை அடைய வேண்டிய இணைப்புக்களும் இலக்குகள் ஊடாக எட்டிப்பிடிப்பதனை அளந்து பார்க்கக்கூடிய பரம்பல்களை இனங்காண்பதற்கு திணைக்களத்தினால் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் படி குறித்த குறிக்கோள்களை இலக்குகள் மற்றும் பரம்பல்களை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிரந்தர அபிவிருத்திக்கான குறிக்கோள் இலக்கினை அளந்து பார்ப்பதற்கான அறிக்கையை இத்துடன் முன்வைக்கிறேன். |

**5 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தினால் 128 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | வெற்றிடங்களுக்கான துரித ஆட்சேர்ப்பு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொறியியலாளர் சேவைக்கு ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 2018.12.31 ஆந் திகதிக்கு இருந்துவரும் 128 வெற்றிடங்களை வருட இறுதிக்குள் குறைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ii) | திணைக்களத்தின் ஒரு ஊழியர் 2011 செப்டெம்பர் 15 ஆந் திகதி இலங்கை இராணுவ சேவைக்கு விடுவிக்கப்பட்டு 2019 செப்டம்பர் வரை அங்கு சேவை ஆற்றுவதுடன் அவருக்கு சம்பளமாக ரூபா 2,554,322 கட்டிட | பழையவர்களை முறைப்படி விடுவிப்பதற்கும் மற்றும் உரிய காலம் முடிவடைந்த பின் வரவழைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செலுத்தப்பட்ட சம்பளத்தை மீண்டும் | அரச முகாமைத்துவ உதவியாளராக இத்திணைக்களத்தில் சேவையாற்றும் திரு.A.M.S.P அத்தநாயக்காவின் வேண்கோளின் படி ஒன்றிணைக்கப்பட்ட சேவைக்கான பணிப்பாளர் நாயகத்தின் முறைப்படியான அனுமதித்தலை 2011.09.15 திகதி முதல் 2016.09.15 ஆந் |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. | பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திகதி வரை தற்காலிகமாக இலங்கை இராணுவ சேவைக்காக விடுவிக்கப்பட்டுள்ளார். அதன் பிறகு 2016.09.16 ஆந் திகதி முதல் 2019.09.14 ஆந் திகதி வரை அதை தொடர்வதற்கான உத்தியோகத்தரினதும் இலங்கை இராணுவத்தினரதும் வேண்டுகோளின் படி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |